

தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள S.I.R. வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்தத்தை கழகத்தினர் அனைவரும் இணைந்து சிறப்பான முறையில் எதிர்கொள்வதற்காகவும் கழகத்தினருக்கு விளக்கிட நடைபெற்ற திருப்போரூர் வடக்கு, தெற்கு ஒன்றியம் மற்றும் பேரூர் கழக பாக முகவர்கள் செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றினார். உடன் ஒன்றியச் செயலாளரும், ஒன்றிய குழு தலைவருமான எல்.இதயவர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புச்செழியன், தொகுதி தேர்தல் பார்வையாளர் எஸ்.எம்.கே.அண்ணாதுரை, தெற்கு ஒன்றியச் செயலாளர் பையனூர் எம்.சேகர், பேரூர் செயலாளர் மு.தேவராஜ், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் முனைவர் சி.பிரதீப் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### SIR தொடர்பாக - சென்னை மாவட்டத்தில்

# 40,04,694 வாக்காளர்களுக்கு - கணக்கீட்டுப் படிவம் வழங்கும் பணி!

## 3,718 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலமாக தொடங்கியது!

சென்னை, நவ. 5-

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் (Special Intensive Revision) தொடர்பாக சென்னை மாவட்டத்தில் 40,04,694 வாக்காளர்களுக்கு 3,718 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலமாக கணக்கீட்டுப் படிவம் வீடு வீடாக சென்று வழங்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.



இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தலின்படி வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (Special Intensive Revision) தொடர்பாக சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வாக்காளர் கணக்கீட்டுப் படிவம் (Enumeration Form) வீடுவீடாக வழங்குவது தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி பல்வேறு கட்டங்களாக 28.10.2025 முதல் 07.02.2026 வரை நடைபெறுகிறது. வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் இப்பணிக்கான கணக்கெடுப்பு படிவம் (Enumeration Form) இன்று (04.11.2025) முதல் வீடு வீடாக வாக்காளர்களுக்கு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. அவ்வாறாக, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதியில் 2,35,272 வாக்காளர்களுக்கு 238 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், பெரம்பூர் சட்டமன்ற தொகுதியில் 2,97,526 வாக்காளர்களுக்கு 284 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் 2,90,653 வாக்காளர்களுக்கு 238 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதியில் 2,40,466 வாக்காளர்களுக்கு 240 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், திரு. வி.க. நகர் சட்டமன்ற தொகுதியில் 2,23,571 வாக்காளர்களுக்கு 206 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், எழும்பூர் சட்டமன்ற தொகுதியில் 1,97,465 வாக்காளர்களுக்கு 169 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், இராயபுரம் சட்டமன்ற தொகுதியில் 1,98,576 வாக்காளர்களுக்கு 181 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் 1,80,341 வாக்காளர்களுக்கு 174 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், சேப்பாக்கம்திருவல்லிகேணி சட்டமன்ற தொகுதியில் 2,40,087 வாக்காளர்களுக்கு 220 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதியில் 2,38,374 வாக்காளர்களுக்கு 239 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், அண்ணாநகர் சட்டமன்ற தொகுதியில் 2,80,422 வாக்காளர்களுக்கு 253 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதியில் 2,85,947 வாக்காளர்களுக்கு 270 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் 2,73,717 வாக்காளர்களுக்கு 254 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், தியாகராயநகர் சட்டமன்ற தொகுதியில் 2,35,497 வாக்காளர்களுக்கு 229 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், மைலாப்பூர் சட்டமன்ற தொகுதியில் 2,69,260 வாக்காளர்களுக்கு 262 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், வேளச்சேரி சட்டமன்ற தொகுதியில் 3,17,520 வாக்காளர்களுக்கு 261 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் என 16 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 40,04,694 வாக்காளர்களுக்கு 3,718 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வீடுவீடாக சென்று கணக்கீட்டுப் படிவம் வழங்கும் பணிகள் இன்று தொடங்கி நடைபெற்று வருகிறது.

பின்னர், பூர்த்தி செய்யப்பட்ட கணகீட்டுப் படிவங்கள் அனைத்தும் 04.12.2025க்குள் மீள பெறப்படும். அந்தந்த வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வழங்கப்படும் இரட்டை படிவங்களை, பொது மக்கள் முழுமையாக பூர்த்தி செய்து கையொப்பத்துடன், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மீள வரும்போது சமர்ப்பித்திட வேண்டும். அவ்வாறு பெறப்படும் படிவங்களில் உள்ள வாக்காளர்களின் பெயர்கள் மட்டுமே வரைவு வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படும். எனவே, வாக்காளர்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு முழுமையாக ஒத்துழைப்பு நல்கி, இத்திருத்தப்பணியினை சிறப்பாக முடித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முன்னதாக, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் தொடர்பாக, சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட தொகுதிவாரியான வாக்குச்சாவடி முகவர்களுடனான (BLAs) ஆலோசனை கூட்டம் சம்மந்தப்பட்ட வாக்காளர்த பதிவு அலுவலர்களால் இன்று (04.11.2025) நடத்தப்பட்டது.

மேலும், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் குறித்த சந்தேகங்கள் ஏதும் இருப்பின், 1950 என்ற கட்டணமில்லா தேர்தல் கட்டுப்பாட்டு தொலைபேசி எண்ணை வாக்காளர்கள் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

# தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் வருகிற 09-11-2025 ஞாயிற்றுக்கிழமை, காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் மற்றும் சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, இராணிப்பேட்டை, வேலூர் ஆகிய மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள், கழக ஆக்கப் பணிகள்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 04.11.2025

**ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ.**
செயலாளர்,
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் வடக்கு பகுதி, தெற்கு பகுதி கண்டோண்மென்ட் நகரம் மற்றும் புனித தோமையார்மலை ஒன்றிய தி.மு.க வட்டங்கள் வாரியாக பாக இளைஞர் அணி நிர்வாகிகள், வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் புதிய நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் மாநில இளைஞரணி செயலாளர் தூத்துக்குடி எஸ். ஜோயல் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். உடன் பகுதி செயலாளர்கள் ப.குணாளன், என்.சந்திரன், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள், கோல்டு பிரகாஷ், ராஜா அன்பழகன், கழக நிர்வாகிகள் பிரவீன் குமார், விக்னேஷ், சுனில் ,சுனில் மேத்யூ,பங்கேற்றனர்.

### தி.மு.க. மாணவர் அணி

# சென்னை கிழக்கு மாவட்டம் மாவட்ட அமைப்பாளர் மற்றும் பகுதி துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

சென்னை கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட வானவில் விஜய் அவர்கள் இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டதால் அவருக்குப் பதிலாக, திரு. **நா. ரஞ்சித் விஜயாலயன்**, பி.எஸ்சி., எம்பிஏ., பி.எல். (5/40, கந்தப்பன் தெரு, சென்னை - 600001) அவர்கள் சென்னை கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டதில் விடுபட்டுள்ளவர்கள் பின்வருமாறு பகுதி துணை அமைப்பாளர்களாகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

**துறைமுகம் கிழக்கு பகுதி**

ஜெ.பவானி (7, பெரியண்ணன் தெரு, பிராட்வே, சென்னை - 600001)

**துறைமுகம் மேற்கு பகுதி**

பி. தமிழ் (238, சத்தியவாணி முத்து நகர், பல்லவன்சாலை, சென்னை - 600002)

**அம்பத்தூர் கிழக்கு பகுதி**

நா. குடியரடி (5/11, சீனிவாசபுரம் முதல் மெயின் ரோடு, கொரட்டூர், சென்னை - 600076)

**அம்பத்தூர் வடக்கு பகுதி**

எ. மோகன்ராஜ் (15, முதல் தெரு, பானு நகர் புதூர், அம்பத்தூர், சென்னை - 600053)

**கொளத்தூர் கிழக்கு பகுதி**

ம. மைதிலி ((162/22, கம்பர் நகர், 6வது குறுக்குத் தெரு, கொளத்தூர், சென்னை - 600099)

**கொளத்தூர் மேற்கு பகுதி**

பா. சங்கீதா (7/3, அக்பர் ஸ்கோயர், 4வது தெரு, கொளத்தூர், சென்னை - 600099)

எச். மோசஸ் கெவின் (35/1, பகவதி அம்மாள் தெரு, கொளத்தூர், சென்னை - 600099)

**திரு.வி.க. நகர் வடக்கு பகுதி**

கி. ஸ்ருதிகா (45, வடிவேல் முதல் குறுக்குத் தெரு, பெரம்பூர், சென்னை - 600011)

வெ. பிரியன் (19/10, ஈடன் கார்டன், குக்ஸ் ரோடு, சென்னை - 600012)

**எழும்பூர் வடக்கு பகுதி**

சு. பவானி (20, வரதாசாரி லைன், காலத்தி அப்பா தெரு, சூளை, சென்னை - 600112)

கோ. ஆதவன் ( 148, புளியந்தோப்பு நெடுஞ்சாலை, சென்னை - 600012)

**வில்லிவாக்கம் மேற்கு பகுதி**

ச. சஞ்சய் (125/65சி, பாரதி நகர் 2வது தெரு, வில்லிவாக்கம், சென்னை - 600045)

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 04-11-2025.

**இரா. ராஜீவ்காந்தி**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

### அமைச்சர் எ.வ.வேலு தலைமை! ஒருங்கிணைந்த

# சேலம் மாவட்ட தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் – எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. – டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிக்கை!







சேலம், நவ.5-

சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன், கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர்.சிவலிங்கம் எம்.பி., மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம். பி. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேலம் மாவட்டத்தில் உள்ள பதினோறு சட்டமன்றத் தொகுதிகளில் தலைமைக் கழகத்தால் முடிவெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ள பகுதி பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் அறிவிக்கப்பட்டுள்ள BLA2 பாக முகவர்கள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், தொகுதி வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள், தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்கிற ஆலோசனைக் கூட்டம் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் எ.வ.வேலு அவர்கள் தலைமையில் சேலம் உளுந்தூர்பேட்டை தேசிய நெடுஞ்சாலையில் சீலநாயக்கன்பட்டி அருகில் அமைந்துள்ள மதன்லால் மைதானத்தில் 10.11.2025 ஆம் நாள் திங்கட்கிழமை காலை சரியாக 09.30 மணிக்கு நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்தில் கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு, வீரபாண்டி, சேலம் தெற்கு, சேலம் வடக்கு, சேலம் மேற்கு, ஓமலூர், மேட்டூர், எடப்பாடி, சங்ககிரி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளின் பகுதி பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், BLA2 பாக முகவர்கள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், தொகுதி வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள், தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் குறித்த நேரத்தில் அவசியம் கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: வாக்காளர்பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வு குறித்து.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### பகுதி செயலாளர் எஸ்.முரளி முன்னிலை! இரா.நரேந்திரன் சிறப்புரை!

# 57 'அ' வட்ட கழக BLA-2, BDA, BYO நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## வட்ட செயலாளர் பா.அண்ணாதுரை அறிக்கை!

சென்னை, நவ.5-

வட்ட கழக செயலாளர் பா. அண்ணாதுரை விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் மேற்கு பகுதி 57 'அ' வட்டத்தில் மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களின் ஆலோசனைப்படி சென்னை1 இல் 49, வரதாமுத்தியப்பன் தெரு, நாராயண குருவைய்யா செட்டி சாரிடிஸ் திருமண மண்டபத்தில் இன்று (05.11.25 - புதன் கிழமை) மாலை 6.00 மணியளவில் வட்ட அவைத்தலைவர் கே.ஜி.துளசிராமன் தலைமையில் பகுதி கழக செயலாளர் எஸ்.முரளி முன்னிலையில் வட்டக் கழக BLA 2, BDA, BYO நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

இதில் சட்டமன்ற தேர்தல் பார்வையாளர் இரா.நரேந்திரன் ஆலோசனை வழங்குகிறார்.

இக்கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் ஆர்.கலைச்செல்வி, தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் எல். சம்பத்குமார், பகுதி துணை செயலாளர் கே.ஆர்.அபரஞ்சி, மாவட்ட பிரதிநிதிகள் டி.எஸ்.சேகர், நா.ரஞ்சித் விஜயாலயன் மற்றும் வட்டகழகத்திற்குட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகி கள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், BDA-க்கள், BYO-க்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று வட்ட கழக செயலாளர் பா.அண்ணா துரை கேட்டுக் கொள்கின்றார்.

# திருவாரூர் சுப்புணி என்கிற சுப்பிரமணியன் மறைவு!

## பூண்டி, கே.கலைவாணன் உள்ளிட்ட கழகத்தினர் அஞ்சலி!

திருவாரூர்,நவ.5-

தி.மு.க. தொடக்க கால உறுப்பினரும்,கழக செயல் மறவருமான சுப்புணி என்று அன்போடு அழைக்கப்பட்ட திருவாரூர் எம். சுப்பிரமணியன் அவர்கள் காலமானார். திருவாரூர் மேலவடம்போக்கி தெருவில் வசித்த வந்த சுப்பிரமணியன் கழகத்தின் ஆரம்ப கால உறுப்பினராவார், கழகத்தின் மீது கொண்ட பற்றினால் இவர் 1974ம் ஆண்டிலேயே பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் தனது சொந்த நிதியில் பொதுமக்களுக்காக பேருந்து நிலையம் அமைத்தவர். முத்தமிழ் அறிஞர் கலைநகர் அவர்களிடத்தில் அதிக அன்பு கொண்டு பழகி வந்தவர்.

மறைந்த சுப்பிரமணியம் அவர்களுக்கு ராஜேந்திரன், வால்கா சேகர், வால்கா ராஜா ஆகிய மகன்கள் உள்ளனர். அன்னாரது மறைவின் தகவல் அறிந்த மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ., நகர செயலாளர் வாரை . எஸ். பிரகாஷ், ஒன்றிய செயலாளர் புளிவளம் ஏ . தேவா மற்றும் கழக நிர்வாகிகள் அன்னாரது இல்லத்திற்கு நேரடியாகச் சென்று மறைந்த சுப்பிரமணியன் அவர்களது உடலுக்கு மலைவலையம் வைத்து இறுதிமரியாதை செலுத்தி அவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினர்.

மறைந்த சுப்பிரமணியம் அவர்களது இறுதி அஞ்சலி திருவாரூர் மேல வடம் போக்கி தெருவிலிருந்து புறப்பட்டு 03.11.2025 திங்கள் அன்று மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது.

# திருப்பூர் கிழக்கு - திருப்பூர் தெற்கு ஆகிய மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளராக பணியாற்றி வந்த மு.பெ.சாமிநாதன் அவர்கள் துணைப் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக திரு. **இல.பத்மநாபன்** (நெ. 4/666, சைட் எண். 103, கிருஷ்ணா நகர், விவேகானந்தா வித்யாலயா பள்ளி எதிரில், தாராபுரம் சாலை, கோவில் வழி, திருப்பூர் 641608 ) அவர்கள் **திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;**

திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளராக பொறுப்பு வகித்து வந்த திரு. இல.பத்மநாபன் அவர்கள், திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக, திரு. **கே.ஈஸ்வரசாமி**, எம்.பி., (நெ. 1428ஏ, கருப்புசாமி புதூர், மைவாடி அஞ்சல், மடத்துக்குளம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம்.) அவர்கள் **திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராகவும்** நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த மாவட்ட நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018.
நாள்: 04.11.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம்,மீனாட்சிபுரம் ஊராட்சி, துரைச்சாமிபுரம் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை சீரமைக்கவும், பேவர்பிளாக் சாலை மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கவும், சிறு பாலங்கள் அமைத்திடவும் மேலும் கிராம மக்களின் அடிப்படை தேவைகள் குறித்து விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்கண்டேயன் ஆய்வு மேற்கொண்டார். உடன் ஒன்றிய செயலாளர் காசிவிஸ்வநாதன், எப்போதும்வென்றான் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முத்துக்குமார், வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராதாகிருஷ்ணன், உட்பட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.